# திருக்குறள் ஒப்புவித்தல் / Thirukkural Recital

| வயது/Ages: 5 -6 | நிலை/Level: 2 |
|---|---|
| **விதிமுறைகள்:** | 1. போட்டிகள் அரங்கினுள் நடைபெறுவதால், போட்டியாளர்கள் நேரில் பங்கேற்க வேண்டும்.<br>2. போட்டியாளர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முப்பது குறள்களிலிருந்து ஒப்பிக்க வேண்டும்.<br>3. **குறளின் பொருள் சொல்லத் தேவை இல்லை.** குறளைப் புரிந்து கொள்வதற்காக மாத்திரமே பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.<br>4. இரண்டு நிமிடத்திற்குள் அதிக குறள்களை ஒப்பிப்பவர் வெற்றி பெற்றவர்.<br>5. குறளின் ஒவ்வொரு சொல்லையும் தெளிவாக உச்சரிக்க வேண்டும்.<br>6. வெற்றியாளர் சொல் உச்சரிப்பு, குறள் உள்ளடக்கம், தங்கு தடையின்றி சொல்லுதல், ஒப்புவிக்கும் விதம் மற்றும் நேர உபயோகம் ஆகியவை கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவர்<br>7. **நடுவர்களின் முடிவே இறுதியானது.** |

Copyright © 2024 All Rights Reserved

| | |
|---|---|
| **Instructions:** | 1. Competition will be held in a venue that contestants should participate in-person.<br>2. Participant must recite Thirukkurals from the pre-selected list of 30 (Scroll below)<br>3. **No need to say the meaning** when reciting the Kural. Meanings are given only for understanding purposes.<br>4. Winner recites the most kurals in 2 minutes.<br>5. Each word in the kural should be pronounced clearly.<br>6. Winner will be evaluated based on 5 criteria - Pronunciation, Content, Flow, Presentation, Duration.<br>7. **The Jurors' decisions are final**. |

Copyright © 2024 All Rights Reserved

## திருக்குறள் பட்டியல் / Thirukkual List

| **1)** | குறள் **3** | கடவுள் வாழ்த்து |
|---|---|---|

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

உரை:

*அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.*

| **2)** | குறள் **14** | வான்சிறப்பு |
|---|---|---|

**ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்.**

உரை:

*மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றி விடும்*

| **3)** | குறள் **34** | அறன்வலியுறுத்தல் |
|---|---|---|

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**

உரை:

*மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை ஆரவாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை.*

| **4)** | குறள் **71** | அன்புடைமை |
|---|---|---|

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**

உரை:

*அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப் ) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.*

| **5)** | குறள் **92** | இனியவை கூறல் |
|---|---|---|

**அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்.**

உரை:

Copyright © 2024 All Rights Reserved

அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்: அதுபோல் முகம் மலராமல் வேறு பட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பார்.

| 6) | குறள் 111 | நடுவு நிலைமை |
|---|---|---|

**தகுதி எனவொன்று நன்றே பகுதியால்**
**பாற்பட்டு ஒழுகப் பெறின்.**

உரை:

*பகைவர், அயலார், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.*

| 7) | குறள் 131 | ஒழுக்கமுடைமை |
|---|---|---|

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

உரை:

*ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.*

| 8) | குறள் 151 | பொறையுடைமை |
|---|---|---|

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

உரை:

*தன்மீது குழி பறிப்போரையே தாங்குகின்ற பூமியைப் போல் தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களின் செயலையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும்.*

| 9) | குறள் 183 | புறங்கூறாமை |
|---|---|---|

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூற்றும் ஆக்கத் தரும்**

உரை:

*காணாதபோது ஒருவனைப் பற்றிப் புறம்பேசிக், காணும்போது பொய்யாக அவனுடன் பேசி வாழ்வதைக் காட்டிலும் இறந்து போவது அற நூல்கள் கூறும் உயர்வைத் தரும்.*

Copyright © 2024 All Rights Reserved

**10) குறள் 201 தீவினையச்சம்**

**தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை என்னும் செருக்கு**

உரை:

*தீயவர்கள் தீவினை செய்ய அஞ்சமாட்டார்கள்; தீவினையால் மகிழ்ச்சி ஏற்படுவதாயினும் அதனைச் செய்திடச் சான்றோர் அஞ்சி நடுங்குவார்கள்.*

**11) குறள் 242 அருளுடைமை**

**நல்லாற்றாள் நாடி அருளாள்க பல்லாற்றால்**
**தேரினும் அஃதே துணை.**

உரை:
*பலவழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருள் உடைமையே வாழ்க்கைக்குத் துணையாய் விளங்கும் நல்வழி எனக் கொள்ளல் வேண்டும்.*

**12) குறள் 291 வாய்மை**

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

உரை:
*பிறருக்கு எள்முனையளவு தீமையும் ஏற்படாத ஒரு சொல்லைச் சொல்வதுதான் வாய்மை எனப்படும்.*

**13) குறள் 313 இன்னாசெய்யாமை**

**செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமந் தரும்.**

உரை:
*யாருக்கும் கேடு செய்யாமல் இருப்பவருக்குப் பகைவர் கேடு செய்துவிட்டால் அதற்குப் பதிலாக அவருக்கு வரும் கேடு மீளாத் துன்பம் தரக் கூடியதாகும்.*

**14) குறள் 414 கேள்வி**

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

*உரை:*

*நூல்களைக் கற்காவிட்டாலும், கற்றவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால், அது நடை தளர்ந்தவனுக்கு உதவிடும் ஊன்றுகோலைப் போலத் துணையாக அமையும்.*

**15) குறள் 431 குற்றங்கடிதல்**

**செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து.**

*உரை:*

*தான் என்னும் அகங்காரம், கோபம், பெண்ணாசை என்னும் சிறுமை இவை இல்லாத ஆட்சியாளர்களின் செல்வம் மேன்மையானது.*

**16) குறள் 473 வலியறிதல்**

**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**

*உரை:*

*தம் ஆற்றலை அறியாமல், ஒரு வேகத்தில் செயலைச் செய்யத் தொடங்கித் தொடரமுடியாமல் இடையே விட்டுக் கெட்டவர் பலர்.*

**17) குறள் 511 தெரிந்துவினையாடல்**

**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.**

*உரை:*

*நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்த, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.*

**18) குறள் 593 ஊக்கமுடைமை**

**ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துடை யார்**

*உரை:*

*ஊக்கத்தை உறுதியாகக் கொண்டிருப்பவர்கள், ஆக்கம் இழக்க நேர்ந்தாலும் அப்போதுகூட ஊக்கத்தை இழந்து கலங்க மாட்டார்கள்.*

Copyright © 2024 All Rights Reserved

**19)** குறள் **612** ஆள்வினையுடைமை

**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

உரை:
*எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையேல் அரைக்கிணறு தாண்டிய கதையாகி விடும்.*

**20)** குறள் **644** சொல்வன்மை

**திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனினூஉங்கு இல்.**

உரை:
*காரணத்தைத் தெளிவாக அறிந்து ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்தச் சொல் வன்மையைப் போன்ற அறமும், உண்மைப் பொருளும் வேறெதுவும் இல்லை.*

**21)** குறள் **707** குறிப்பறிதல்

**முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.**

உரை:
*ஒருவன் விருப்பம் கொண்டாலும், வெறுப்புக் கொண்டாலும் அவனுடைய முகம் முற்ப்பட்டு அதைத் தெரிவிக்கும், அம் முகத்தைவிட அறிவு மிக்கது உண்டோ.*

**22)** குறள் **755** பொருள்செயல்வகை

**அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்.**

உரை:
*பெரும் செல்வமாக இருப்பினும் அது அருள் நெறியிலோ அன்பு வழியிலோ வராதபோது அதனைப் புறக்கணித்துவிட வேண்டும்.*

**23)** குறள் **789** நட்பு

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

Copyright © 2024 All Rights Reserved

*உரை:*
*மனவேறுபாடு கொள்ளாமல் தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் துணைநின்று நண்பனைத் தாங்குவது தான் நட்பின் சிறப்பாகும்.*

**24) குறள் 854 இகல்**

**இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்**
**துன்பத்துள் துன்பங் கெடின்.**

*உரை:*
*துன்பத்திலேயே பெருந்துன்பம் பகையுணர்வுதான். அந்த உணர்வை ஒருவன் அகற்றி விடுவானேயானால், அது இன்பத்திலேயே பெரும் இன்பமாகும்.*

**25) குறள் 922 கள்ளுண்ணாமை**

**உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்.**

*உரை:*
*மது அருந்தக் கூடாது; சான்றோர்களின் நன் மதிப்பைப் பெற விரும்பாதவர் வேண்டுமானால் அருந்தலாம்.*

**26) குறள் 972 பெருமை**

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

*உரை:*
*பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.*

**27) குறள் 992 பண்புடைமை**

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

*உரை:*
*அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ் விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.*

**28) குறள் 994 பண்புடைமை**

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புள ராட்டும் உலகு.**

Copyright © 2024 All Rights Reserved

உரை:
*நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.*

**29)** குறள் **1001** **நன்றியில்செல்வம்**

**வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்**
**செத்தான் செயக்கிடந்தது இல்.**

உரை:
*அடங்காத ஆசையினால் வீடு கொள்ளாத அளவுக்குச் செல்வத்தைச் சேர்த்து வைத்து அதனை அனுபவிக்காமல் செத்துப் போகிறவனுக்கு, அப்படிச் சேர்க்கப்பட்ட செல்வத்தினால் என்ன பயன்?.*

**30)** குறள் **1032** **உழவு**

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**

உரை:
*பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.*

Copyright © 2024 All Rights Reserved